# 9. தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்

## 9.1. முன்னுரை

உயர்கல்வி தொடர்பாக பிற மொழிகளில் இருக்கும் நூல்களைத் தமிழாக்கம் செய்து வெளியிடுதல் மற்றும் மாணவர்களின் அறிவுத் திறனை மேம்படுத்துதல் ஆகிய நோக்கங்களுடன் "தமிழ் வெளியீட்டுக் கழகம்" 1961-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.

தொடர்ந்து 1970-ஆம் ஆண்டு தமிழ் வெளியீட்டுக் கழகத்தை உள்ளடக்கிய தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் அமைக்கப்பட்டது. இந்நிறுவனம் பாடநூல்களை அச்சிட்டு விநியோகம் செய்யும் பணிகளுடன் இலக்கியம், அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் பிற வழி பாடநூல்களையும் அச்சிட்டு விற்பனை மற்றும் விநியோகம் செய்வதையும் கருத்தில் கொண்டு 1993-ஆம் ஆண்டு "தமிழ்நாடு பாடநூல் கழகம்" என பெயரிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து, கல்வி உபகரணங்களைக் கொள்முதல் செய்யும் பணி இக்கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டதால், "தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்" என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. தற்பொழுது, இக்கழகம் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000 - இன் கீழ் தமிழ்நாட்டில் உள்ள அரசு மற்றும் அரசு நிதியுதவி

பெறும் பள்ளி மாணாக்கர்களுக்கு கல்வி உபகரணங்களைக் கொள்முதல் செய்து விநியோகம் செய்துவருகிறது.

**9.2. நோக்கங்கள்**

- தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் மூலம் 1 முதல் 7ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணாக்கர்களுக்கு செறிவூட்டப்பட்ட முப்பருவ பாடநூல்களையும் 8 முதல் 12ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணாக்கர்களுக்கு செறிவூட்டப்பட்ட முழு வருட பாடநூல்களையும் அச்சிடுதல்.
- உயர்கல்வி பாடத்திட்டத்தின் கீழ் பொறியியல், மருத்துவம், வேளாண்மை, சூழலியல், சட்டம், கால்நடை அறிவியல், இலக்கியம், சித்த மருத்துவம், மீன்வளம், உடற்கல்வி சார்ந்த உயர்கல்வி நூல்களை ஆங்கிலத்திலிருந்து தமிழாக்கம் செய்து அச்சிட்டு வெளியிடுதல்.
- தமிழ் இலக்கியங்களை ஆங்கிலம் மற்றும் தென்னிந்திய மொழிகளில் வெளியிடுதல்.
- அரிய மற்றும் பழமை வாய்ந்த தமிழ் நூல்களை மறுபதிப்பு செய்தல் மற்றும் தமிழ் இலக்கிய வளங்களை உருவாக்குதல்.

அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளி மாணாக்கர்களுக்கு புத்தகப்பை, காலேந்திகள் போன்றவற்றைக் கொள்முதல் செய்து வழங்கும் முகமையாக இக்கழகம் செயல்பட்டு வருகிறது. சுமார் ரூ.233.52 கோடி மதிப்பிலான கல்வி உபகரணங்கள் 2020-21ஆம் ஆண்டில் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

## 9.3. உள்கட்டமைப்பு

இக்கழகம் தனது சொந்தக் கட்டடத்தில் சென்னையில் உள்ள டி.பி.ஐ. வளாகத்தில் செயல்படுகிறது. மாநிலத்தின் பல்வேறு இடங்களில் வட்டார அலுவலர்களின் தலைமையில் 22 கிடங்குகள் அமைந்துள்ளன.

## 9.4.அச்சுப்பணி

### *9.4.1. பாடநூல்கள்*

இந்நிறுவனம் வெளியிடும் பாடநூல்கள் நேர்த்தியான 80 GSM தாள் (Elegant printing paper) மற்றும் லேமினேஷன் செய்யப்பட்ட 230 GSM ஆரா ஃபோல்ட் ப்ளு போர்டு கொண்ட (Aura Fold Blue Board) அட்டையில் பாடநூல்கள் அச்சடிக்கப்படுகின்றன. மாணவர்கள், சம்பந்தப்பட்ட பாடம் உள்ளடக்கிய காணொளி மற்றும் வினா வங்கி இணையதள விவரங்களைக் காண்பதற்கு வசதியாக விரைவு துலங்கல்

குறியீடு (QR Code) என்ற சிறப்பு அம்சத்துடன் செறிவூட்டப்பட்ட பாடநூல்கள் (Energized Textbooks) அச்சிட்டு விநியோகிக்கப்படுகின்றன.

2020-21 இல் அச்சிடப்பட்ட பாடநூல்கள் விவரம் பின்வருமாறு :-

| பாடநூல்களின் விவரங்கள் | வருடம் | அச்சடிக்கப்பட்ட பாடநூல்களின் எண்ணிக்கை (இலட்சத்தில்) | தோராய மொத்த மதிப்பு (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|
| அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 12 வகுப்புகளில் பயிலும் மாணாக்கர்களுக்கு பாடநூல்கள் (இலவச பிரதிகள்) | 2020-21 | 503.95 | 291.87 |
| | 2021-22 | 306.66* | 147.17 |
| சுயநிதி பள்ளிகளில் 1 முதல் 12 வகுப்புகளில் பயிலும் மாணாக்கர்களுக்கான பாடநூல்கள் (விற்பனை பிரதிகள்) | 2020-21 | 338.64 | 165.07 |
| | 2021-22 | 111.38* | 60.00 |
| மத்திய இடைநிலைக் கல்வி வாரியப் பள்ளிகளில் 1 முதல் 10 வகுப்புகளில் பயிலும் மாணாக்கர்களுக்கான தமிழ் மொழிப் பாடநூல்கள் (விற்பனை பிரதிகள்) | 2020-21 | 11.13 | 7.56 |
| | 2021-22 | 8.47 | 3.78 |

* ஒன்று முதல் ஏழாம் வகுப்பு வரை முதல் பருவ புத்தகங்கள் மட்டும் மற்றும் 8 முதல் 12ஆம் வகுப்பு வரை ஆண்டுப் புத்தகங்கள்

நடப்பு ஆண்டில், 2,52,77,272 பயிற்சிக்கட்டகப் புத்தகங்கள் (Work Book) மற்றும் 97,94,688 இணைப்பு பயிற்சிக்கட்டகப் புத்தகங்கள் (Bridge Course Material) அச்சடிக்கப்பட்டு, 120 மாவட்டக் கல்வி அலுவலர்கள் மூலம் மாணவர்களுக்கு விநியோகிக்கப்பட்டது.

### *9.4.2 பிற நூல்கள்*

2020-21- இல், இக்கழகம் மூலம் கீழ்க்காணும் துறைகளுக்கு தோராயமாக ரூ.14.96 கோடி மதிப்பில் 72.62 இலட்சம் நூல்கள் அச்சடித்து வழங்கப்பட்டுள்ளது.

- ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி
- சென்னைப் பல்கலைக்கழகம்
- ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட இயக்ககம்
- பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககம்
- தொடக்கக் கல்வி இயக்ககம்
- தொல்லியல் துறை
- தொழில்நுட்பக் கல்வி இயக்ககம்
- முன்னாள் படைவீரர் நலத்துறை

பார்வைத்திறன் குறைபாடுடைய மாணாக்கர்களுக்குப் பயன்படும் வகையில், தேவையின் அடிப்படையில் 1 முதல் 8-ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு பிரெய்லி நூல்கள் கண்பார்வையற்றோர் தேசிய நிறுவனம் (NIVH) மூலம் அச்சடிக்கப்பட்டு ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி இயக்ககத்திற்கு வழங்கப்படுகின்றன.

### 9.5. பாடநூல்கள் விநியோகம்

இலவசப் பாடநூல்கள், வட்டார / மாவட்டக் கல்வி அலுவலகங்கள் மூலமாக அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளி மாணவர்களுக்கு நேரிடையாக வழங்கப்படுகிறது. மற்ற தனியார் பள்ளிகளை பொறுத்தமட்டில், இணையதளம் ஆணைகளின் மூலமாக வட்டார அலுவலகங்களிலிருந்து நேரடியாக புத்தகங்களைப் பெற்றுக்கொள்ளலாம். பாடநூல்களை டி.பி.ஐ. வளாகம், அடையாறு கிடங்கு மற்றும் அண்ணா நூற்றாண்டு நூலகத்திலுள்ள விற்பனை மையங்கள் மூலம் விற்பனை செய்வது மட்டுமின்றி, மாணவர்கள் அவர்கள் வீட்டிலிருந்தே புத்தகங்களை பெறும் பொருட்டு உள்நுழைவு முறையை பயன்படுத்தி இணையதளம் மூலம் புத்தகங்களை அடையாறு கிடங்கிலிருந்து பெற வசதி செய்யப்பட்டுள்ளது. இணையதள வசதி இல்லாத தனிநபர்கள் வருவாய்

வட்டாட்சியர் அலுவலகங்களில் நிறுவப்பட்டிருக்கும் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவன மையத்தின் மூலம் இவ்வசதியைப் பெறுகிறார்கள்.

## 9.6. இலக்கியம் மற்றும் அறிவியல் நூல்களைத் தமிழாக்கம் செய்தல்

சிறந்த தமிழ் இலக்கிய நூல்களை ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்ய முன்னனி வெளியீட்டாளர்களான ஆக்ஸ்போர்டு யுனிவர்சிட்டி பிரஸ், ஹார்பர் கோலின்ஸ், பென்குயின், விதாஸ்தா, நியோகி புக்ஸ் மற்றும் ரத்னா புக்ஸ் ஆகியோருடன் ஒருங்கிணைந்து சி.சு.செல்லப்பாவின் 'வாடிவாசல்', கிராஜநாராயணனின் 'கரிசல் கதைகள்', பேராசிரியர் பி.எஸ்.சுந்தரம் மொழிபெயர்த்த 'குறள்', திருமதி.ராஜம் கிருஷ்ணனின் 'சுழலில் மிதக்கும் தீபங்கள்', நீலபத்மநாபனின் 'தலைமுறைகள்' மற்றும் தி.ஜானகி ராமனின் 'செம்பருத்தி' ஆகிய 6 நூல்கள் கூட்டு வெளியீடுகளாகக் கொண்டுவரப்பட்டுள்ளன.

'கீழடி-வைகை நதிக்கரையில் சங்ககால நகர நாகரிகம்' என்னும் தலைப்பிலான நூல் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் 2019-20-லும் பிற இந்திய மொழிகள் மற்றும் ஐ.நா. மொழிகள் உட்பட 22 மொழிகளில் ரூ.10.00 இலட்சம் செலவில் தொல்லியல் துறையோடு இணைந்து கூட்டு வெளியீடாக

2020-21-லும் கொண்டு வரப்பட்டது. இதுநாள் வரை ரூ.14.8 இலட்சம் மதிப்பிலான நூல்கள் விற்பனையாகியுள்ளன. புத்தகக் கண்காட்சியில் இந்நூல் விற்பனையில் சாதனை படைத்துள்ளது.

தமிழ் நாட்டில் காந்தி, மாபெரும் தமிழ் கனவு, கதா விலாசம், உ.வே.சா.வின் கட்டுரைகள், தோப்பில் முகமது மீரானின் சிறுகதைகள் உள்ளிட்ட 8 நூல்கள் மொழிபெயர்ப்பின் இரண்டாவது கட்டத்தில் வெளிக்கொணரத் திட்டமிடப்பட்டுள்ளது.

மதிப்பு மிக்க பன்னாட்டுப் பதிப்பகங்களால், ஏற்கெனவே மொழியாக்கம் செய்து பதிப்பிக்கப்பட்டு, தற்போது காணக்கிடைக்காத தமிழ் செவ்வியல் நூல்களும் பாடநூல் கழகத்தால் கொண்டுவரப்படுகின்றன. சங்க இலக்கியங்களிலிருந்து தேர்வு செய்யப்பட்டு, 'Poems on Love and War' என்னும் தலைப்பில் ஆங்கிலத்தில் பேராசிரியர் ஏ.கே.இராமானுஜன் அவர்களால் மொழியாக்கம் செய்யப்பட்டு ஆக்ஸ்போர்டு யுனிவர்சிட்டி பிரஸ் (Oxford University Press) பதிப்பகம் வெளியிட்ட சங்க இலக்கியக் கவிதைகள் நூல் கூட்டு வெளியீடாகக் கொண்டுவரப்பட உள்ளது. பேராசிரியர் ஆர்.பார்த்தசாரதி அவர்களால் மொழியாக்கம் செய்யப்பட்டு பெங்குயின் ராண்டம் ஹவுஸ்

(Penguin Random House) பதிப்பகத்தால் வெளியிடப்பட்ட சிலப்பதிகாரம் நூல், இந்த வகைமையில் வெளிவர உள்ள மற்றொரு நூல் ஆகும்.

தமிழ்நாட்டு மாணவர்கள் உயர்கல்வியைத் தொடரும் பொருட்டு, தேசிய அளவில் நடைபெறும் போட்டித் தேர்வுகளில் பங்குபெற அவர்களுக்குப் பயன்படும் வினா-வங்கிகள் பியர்சன் நிறுவனத்தோடு கூட்டு வெளியீடாகக் கொண்டுவரப்படவுள்ளன.

### 9.7 அரிய நூல்களை மின்மயமாக்கி மறுபதிப்பு செய்தல்

இக்கழகம் 875 அரிய நூல்களை தமிழ் இணைய கல்விக் கழகம் மூலம் மின்னாக்கம் செய்து, 635 அரிய நூல்களை மறுஅச்சு செய்து விற்பனை செய்து வருகிறது. இவற்றில் ஆராய்ச்சி மாணவர்கள், பேராசிரியர்கள், போட்டித் தேர்வு ஆர்வலர்கள் மற்றும் தேவைப்படுபவர்களுக்கு ரூ.12.62 இலட்சம் மதிப்புள்ள 8921 பிரதிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. இந்த அரிய நூல்கள் அண்ணா நூற்றாண்டு நூலகம், கன்னிமாரா நூலகம், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், அகில இந்திய குடிமைப் பணித் தேர்வுப் பயிற்சி நிறுவனம், அண்ணா மேலாண்மை நிலையம், அண்ணா பல்கலைக்கழகம், தமிழ் இணையக் கல்விக் கழகம் மற்றும் ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம்

(RMRL) ஆகியனவற்றிற்கு மாணவர்களின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டுள்ளன. இப்புத்தகங்கள் குறித்த விழிப்புணர்வை பொது வாசகர்களுக்கு ஏற்படுத்தும் பொருட்டு, இவை ஆண்டுதோறும் சென்னை புத்தகக் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்படுகின்றன.

நாட்டுடைமையாக்கப்பட்ட அரிய நூல்களின் செம்பதிப்புகளையும் ISBN எண் பெற்று வெளியிடும் பணி தொடங்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக 10 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. இந்த ஆண்டு 20 நூல்களை வெளியிடுவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணாக்கரின் கல்வியியல் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டும் அவர்களது கற்றல் திறனை மேம்படுத்தும் நோக்கிலும் கல்வி உபகரணங்களை இந்தக் கழகம் கொள்முதல் செய்து மாணவர்களுக்கு வழங்கி வருகிறது.

பாடநூல் கழகம் நூல்களை அச்சிட்டு வழங்கல் பணிக்காக மட்டும் தோற்றுவிக்கப்பட்டு, தற்பொழுது பன்மடங்கு உயர்ந்து இணையதளம் மூலம் நூல்களை விற்பனை செய்தல், அரிய மற்றும் பழமை வாய்ந்த நூல்களை மறுபதிப்பு செய்து வெளியிடுதல், அறிவியல் மற்றும் இலக்கிய நூல்களை ஆங்கிலத்திலிருந்து

தமிழாக்கம் செய்தல், அரிய நூல்களை மின்மயமாக்குதல், மாணவர்களுக்கான கல்வி உபகரணங்களைக் கொள்முதல் செய்தல் போன்ற இதர பணிகளையும் சிறந்த முறையில் செய்து வருகிறது.

This document was created with the Win2PDF “print to PDF” printer available at
http://www.win2pdf.com

This version of Win2PDF 10 is for evaluation and non-commercial use only.

This page will not be added after purchasing Win2PDF.

http://www.win2pdf.com/purchase/